# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.159/2024 | Date | : 11.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : கோவிந்தராஜ் | Calling | : |
| Father Name | : சின்னதுரை | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.02.2026.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மாவெளிபாளையம், பச்சப்பட்டியில் வசித்து லாரி பட்டறையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 24-10-2023 ம் தேதி, மாலை சுமார் 05.30 மணியளவில் நான் எங்கள் ஊர் பச்சபட்டியில் உள்ள சாலையின் திருப்பத்தில் இருந்தபோது, போலிசார் அங்கு அதற்கு முந்தைய தினம் நடந்த விபத்து சம்பந்தமாக விசாரித்துகொண்டிருந்தனர்.

2) அப்போது, போலிசார் சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். பார்வை மகஜரில் நானும், செல்லப்பன், என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 1வது சாட்சி கையொப்பம் செல்லப்பன் என்பவருடையது ஆகும். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை :-</u>**

போலிசார் கேட்டுகொண்டதற்கு இணங்க ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த இடத்தில் விபத்து நடந்தது என்று எனக்கு குறிப்பாக தெரியாது என்றால் சரிதான்.

Sd/-S.Sathiya,

Sd/-Govindaraj

Judicial Magistrate No.1,
Sankari.